පළාත් අධ්‍යාපන දෙපාර්තමේන්තුව - උතුරු මැද පළාත
மாகாணக் கல்வித் திணைக்களம் - வட மத்திய மாகாணம்
DEPARTMENT OF EDUCATION – NORTH CENTRAL PROVINCE

| தரம் |
| --- |
| 11 |

**மூன்றாம் தவணைப் பரீட்சை - 2023**

**இஸ்லாம்**

பாடசாலையின் பெயர் : ........................................................................................................

மாணவர் பெயர்/ சுட்டெண் : ........................................................................
........................................................................................................ நேரம் : **3** மணித்தியாலம்

## விடைகள்

### பகுதி - I

**(01)**

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 01) | 3 | 11) | 4 | 21) | 1 | 31) | 1 |
| 02) | 2 | 12) | 4 | 22) | 3 | 32) | 4 |
| 03) | 3 | 13) | 2 | 23) | 1 | 33) | 1 |
| 04) | 1 | 14) | 3 | 24) | 3 | 34) | 4 |
| 05) | 3 | 15) | 2 | 25) | 4 | 35) | 2 |
| 06) | 1 | 16) | 3 | 26) | 2 | 36) | 1 |
| 07) | 3 | 17) | 1 | 27) | 1 | 37) | 1 |
| 08) | 4 | 18) | 3 | 28) | 4 | 38) | 2 |
| 09) | 4 | 19) | 1 | 29) | 3 | 39) | 4 |
| 10) | 1 | 20) | 1 | 30) | 2 | 40) | 3 |

### பகுதி -II

**(01)**

- *i.* கதரிய்யா, ஜபரிய்யா, மு.ஃ.தஸிலா *(இவற்றுள் ஏதேனும் இரண்டு)*
- ii. முகஸ்துதி, அல்லாஹ் அல்லாதவற்றின் மீது சத்தியம் செய்தல், வசியம் செய்தல், சாஸ்திரம் பார்த்தல் *(ஏதேனும் இரண்டு)*
- iii. நிய்யத் வைத்தல், உடல் முழுவதையும் தண்ணீரால் நனைத்தல்
- iv. தெய்வீகத் தன்மை, சமூகத்தில் ஏற்படும் பொருளாதார ஏற்றத்தாழ்வுகளை சீர் செய்தல், சமூக நலனுக்கும் தனி மனித நலனுக்கும் இடையே இணக்கம் காணல், ஆத்மீகத் தேவை லௌகீகத் தேவை ஆகிய இரண்டையும் சமகாலத்தில் கவனத்தில் கொள்ளல், எவருக்கும் அநீதி நிகழாமை நெகிழ்வுத் தன்மை *(எவையேனும் இரண்டு)*
- v. இத்தா இருக்கும் பெண் தன்னை அலங்கரித்தல், திருமணம் முடித்தல், திருமணப் பேச்சுவார்த்தையில் ஈடுபடுதல், ஆபரணங்கள் அணிதல் *(எவையேனும் இரண்டு)*
- vi. முஸ்லிம் நேசன், ஞானதீபம்
- vii. தவர்ருக், இப்திராஷ்
- viii. கிழக்கையும் மேற்கையும் இணைக்கும் வணிக பாதைக்கு மத்தியில் இலங்கை அமைந்திருந்தமை இலங்கையின் துறைமுகங்கள் துறைமுகங்களை அண்டிய நகரங்களில் காணப்பட்ட வியாபார பொருட்கள் பாதுகாப்பு வசதிகள் உணவு மற்றும் குடிநீர் வசதிகள் கப்பலை பழுது பார்க்கும் வசதிகள்

ix. முஸ்லிம்கள் நெசவுத் தொழிலை அறிமுகப்படுத்தியமை, மன்னர்களுக்கு வணிக துறையில் ஆலோசனை வழங்குவர்களாக இருந்தமை, இலங்கையில் உள்ள பொருட்களை வெளிநாடுகளில் சந்தைப்படுத்தி இலங்கைக்கான அறிமுகத்தை பெற்றுக் கொடுத்தமை

x. கனவு, அசரீரி, சமிக்கைகள், ஹதீஸ்கள்

**(02)**

i. அர்கானுல் ஈமான் என்ற அடிப்படை இஸ்லாமிய நம்பிக்கைகளும் அவை தொடர்பான விடயங்களும் அகீதா எனப்படும்

***அல்லது***

இறுதியானதும் உறுதியானதுமான சான்றுகளைக் கொண்டு கட்டி எழுப்பப்பட்ட நம்பிக்கைகளை குறிப்பது அகீதா எனப்படும்.

ii. அபுல்ஹசன் அல்அஷ்அரி, அபு மன்சூர் அல்மாதூருதி, அபூஜ.்.பர் அத்தஹாவி, அஹ்மத் இப்னு ஹன்பல் (ரஹ்)

iii. கு.்.ப்ர் என்பது மொழியில் மறைத்தல் மூடுதல் என்ற கருத்தையும் இஸ்லாமிய வழக்கில் நம் இஸ்லாத்தின் நம்பிக்கைகளையும் திட்டவட்டமாக அறியப்பட்ட அதன் செயல்முறைகளையும் நிராகரிப்பது கு.்.ப்ர் எனப்படும். குப்ர் மூன்று வகைப்படும் : நம்பிக்கை சார்ந்தவை, சொல் சார்ந்தவை, செயல் சார்ந்தவை

**(03)**

i. ‘‘மு.்.மினுக்கும் காப்பிருக்கும் இடையிலான வேறுபாடு தொழுகையை விடுவதாகும்’’ (முஸ்லிம்)
‘‘விவகாரங்களில் தலையாயது இஸ்லாமாகும் அதன் தூண் தொழுகையாகும் அதன் கடிவாளம் அல்லாஹ்வின் பாதையில் போராடுவதாகும்.’’ (அஹ்மத்)

ii. நிய்யத் வைத்தல், துல்ஹஜ் ஒன்பதாம் நாள் அரபாவில் தரித்தல், தவா.்.புல் இபாழாவை நிறைவேற்றல், ஸ.்.யு செய்தல், தலை முடி களைதல், ஒழுங்கு முறையாக செய்தல்.

iii. ஆன்மீக விருத்தி, இறைவனின் அருட்கொடைகளை உணர்தல், ஏழைகளின் துயரத்தை விளங்கிக் கொள்ளல், உடல் ஆரோக்கியம் கிடைத்தல், இறைவனுக்கு முழுமையாக அடிபணிவதற்கான பயிற்சியைப் பெறல்

(2+3+5 புள்ளிகள்)

**(04)**

i. புதிய பிரச்சனை ஒன்று தோன்றி அதற்கான தீர்வை அல்குர்ஆனோ சுன்னாவோ நேரடியாக வழங்கி இருக்காத போது அல்குர்ஆனிலும் சுன்னாவிலும் ஆழமான அறிவுள்ளவர்கள் அவ்விரண்டையும் அடிப்படையாக வைத்து தீர்வினை பெறுவதற்காக மேற்கொள்கின்ற ஆய்வு முயற் முயற்சியே இஜ்திஹாத் எனப்படும்.

ii. நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் பின்னர் நல்லாட்சியை தொடர்ந்தமை
போலி நபிமார்களின் சவால்களை முறியடித்தமை
ஸக்காத்தை வழங்க மறுத்த கூட்டத்தினரை முறியடித்தமை
அல்குர்ஆனை தொகுத்து நூலுருப்படுத்தியமை
அனுபவமிக்க கவர்னர்களை நியமனம் செய்து நிர்வாகத்தை இஸ்திரப்படுத்தியமை
எல்லைப்புற ஆட்சியாளர்களினால் இஸ்லாமிய உலகுக்கு இருந்த அச்சுறுத்தலை முறியடித்தமை
தனக்குப்பின் பொருத்தமான ஒரு கலீபாவை நியமித்து சென்றமை

iii. முஸ்லிம் சமூகத்தின் கல்வி மறுமலர்ச்சிக்காக பாடுபட்டமை.
முஸ்லிம்களிடையே காணப்பட்ட மூடப்பழக்க வழக்கங்களைக் களைந்து மார்க்கத்தின் பக்கம் வழிகாட்டியமை
அரசியல் ரீதியான உரிமைகளை பெற்றுத்தர குரல்கொடுத்தமை

தனியான முஸ்லிம் பாடசாலைகளை நிறுவி இஸ்லாமிய சூழலில் கற்பதற்கான ஏற்பாடுகளை செய்தமை.
முஸ்லிம்களின் விவாக விவாகரத்து விடயங்களை பதிவு செய்ய வேண்டும் என்ற முறையை அறிமுகப்படுத்த பாடுபட்டமை

(2+3+5 புள்ளிகள்)

**(05)**

i. ரஹ்ன் : அடகு வைத்தல், ஸலம் : முற்கொடுப்பனவு வியாபாரம்

ii. சிறுபராய முதலே வீரம் விவேகம் ஆகியவற்றை கொண்டிருந்தமை.
சிறுவர்களில் முதலாவது இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டமை.
நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் ஹிஜ்ரத்தின் போது அவரது படுக்கையில் எதிரிகள் சூழ்ந்திருந்த நேரத்திலும் கூட துணிச்சலாக தூங்கியமை.
யுத்தங்களில் தனது துணிச்சலை வெளிப்படுத்தி அஸதுல்லாஹ் என்ற சிறப்பு பெயரை நபிகளாரிடம் பெற்றமை.
குல.்.பாஉர ராஷ்தின்களின் ஆட்சி காலத்தில் அரச ஆலோசகராகவும் நீதிபதியாகவும் செயல்பட்டவை.

iii. இத்தாவின் வகைகளை மூன்றாக வேறுபடுத்த முடியும்
1. **கணவனின் மரணத்திற்கான இத்தா** : கணவன் மரணித்தால் அவருடைய எல்லா மனைவியரும் இத்தா அனுஷ்டிப்பது கடமையாகும். வயது வேறுபாடு இன்றி அனைவரும் நான்கு மாதங்களும் 10 நாட்களும் இந்த அனுஷ்டிக்க வேண்டும்
2. **கர்ப்பிணியின் இத்தா** : கணவன் மரணிக்கும் போது மனைவி கர்ப்பிணியாக இருந்தால் அவளது இத்தா காலம் பிரசவம் நிகழும் வரையிலும்
3. **தலாக் ரஜ்ஈக்கான இத்தா**: முதலாம் அல்லது இரண்டாம் தலாக் சொல்லப்பட்ட பெண்கள் இதுதான் அனுஷ்டிக்க வேண்டும். அது மூன்று குரூஉகள் - சுத்த காலங்களாகும்

(2+3+5 புள்ளிகள்)

**(06)**

i. பனூ இஸ்ரவேலர்கள் 71 கூட்டத்தினராகப் பிரிந்தனர். எனது உம்மத்தினர் 73 கூட்டத்தினராக பிரிவர். அதில் ஒரு கூட்டத்தை தவிர மற்ற அனைத்தும் நரகம் நுழையும். அந்த ஒரு கூட்டம்தான் சுன்னாவல் ஜமா ஆகும். (இப்னு மாஜா)

ii. ஆதாரபூர்வமான தகவல்களை வெளியிடுதல்
உண்மையும் அமானிதமும்
நம்பகத் தன்மையும் காணப்படுதல்
நடுநிலை தவறாமை
பொதுநலன் பேணல்
பண்பாடு மற்றும் ஒழுக்கங்களை பேணல்

iii. *அல்லாஹ்வின் நாட்டப்படியே அனைத்தும் நடைபெறுகின்றன எனினும் மனிதன் செயல் சுதந்திரம் வழங்கப்பட்டவன் என்ற வகையில் அவன் அனைத்து செயல்களுக்கும் அவனே பொறுப்பாளியாவான் என்ற கருத்தை விளக்கும் வகையில் விடை அமைந்திருத்தல் வேண்டும்*

(2+3+5 புள்ளிகள்)

**(07)** *பொருத்தமான விடைகள் எழுதப்பட்டிருப்பின் புள்ளி வழங்கவும்*

i. *தரம் 11 - பாடநூல் பக்கம் 14ஐ பார்க்கவும்.*
ii. *தரம் 11 - பாடநூல் பக்கம் 139,140ஐ பார்க்கவும்.*
iii. *தரம் 10 - பாடநூல் பக்கம் 80,81ஐ பார்க்கவும்.*
iv. *தரம் 10 - பாடநூல் பக்கம் 53,54,55ஐ பார்க்கவும்.*

(5x2=10 புள்ளிகள்)